கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையாளரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திருமதி. த.வ. சுபாஷினி M.A.,

ந.க.எண். 035/2025/எப் 1 நாள். 21.07.2025

பொருள்: மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் – கோபிசெட்டிபாளையம் நகராட்சி – நகரமைப்பு பிரிவு – லக்கம்பட்டி கிராமம், வார்டு–A, பிளாக் – 1 நகரளவை எண்.46, க.ச.எண்.108 இல் – 2900 சதுர மீட்டர் (0.71$_{1/4}$ சென்ட்) பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/ DTCP/ ERODE/ LAYOUT APPROVAL NO.02 / 2025 என எண்ணிடப்பட்டு உத்தரவு பெறப்பட்டது – இறுதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக

பார்வை:
1. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களின் இணைய வழி உத்தரவு ந.க.எண்.TDJQOXUY/2025/TCP நாள்.04.01.2025
3. தானப்பத்திர ஆவண எண்.4302/2024 மற்றும் 4303/2024 நாள்.31.12.2024
4. திருமதி.வாசுகி சின்னசாமி அவர்களின் விண்ணப்பம் நாள்.06.01.2025
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.22.01.2025
6. அரசு பொறியியல் கல்லூரி (IRTT) அறிக்கைஎண்.GCEE/CE35/ 2025–26/Ref No.14 நாள்.28.05.2025
7. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம் அவர்களின் உட்பிரிவு உத்தரவு எண்.2025/10/31/000672SD நாள்.11.06.2025
8. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம். நாள்.06.06.2025
9. நகர்மன்ற தீர்மானம் எண். 1274 நாள். 30.06.2025

******

கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம், வார்டு–A, பிளாக் – 1, நகரளவை எண்.46, க.ச.எண்.108 இல் – 2900 சதுர மீட்டர் (0.71 $_{1/4}$ சென்ட்) அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2 இல் காணும் உத்தரவில் சாலை வரைபட ஒப்புதல் அளித்து உத்திரவிடப்பட்டும் இதன் பின்னர் SWP/ DTCP/ ERODE/ LAYOUT APPROVAL NO. 02/2025 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் பொது ஒதுக்கீடுகளை பார்வை 3 இல் கண்டவாறு நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டு மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள மனையிடங்களை தனித்தனியாக உட்பிரிவு செய்து பார்வை 7 இல் கண்டவாறு வட்டாட்சியரின் உத்தரவு வரப்பெற்றது. மேலும், மேற்படி மனைப்பிரிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள 10 மனைகளுக்கும் இவ்வலுவலக வருவாய் பிரிவின் மூலம் காலியிட வரிவிதிப்புசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தரவின்படியும், இந்நகராட்சி பொறியர் பிரிவின் 20.06.2025 – ஆம் நாளிட்ட குறிப்புகளின் பேரிலும், பார்வை 9 இல் காணும் தீர்மானத்தில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

எனவே, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலின்படியும், பொறியியர் பிரிவின் குறிப்புகளின் அடிப்படையிலும், பார்வை 9 இல் காணும் நகர்மன்றத்தீர்மான ஒப்புதலின் பேரிலும் லக்கம்பட்டி கிராமம், வார்டு–A, பிளாக் – 1 நகரளவை எண்.46, க.ச.எண்.108 இல் – 2900 சதுர மீட்டர் (0.71$_{1/4}$ செண்ட்) பரப்பளவு உள்ள இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/ DTCP/ ERODE/LAYOUT APPROVAL NO. 02/2025 என எண்ணிடப்பட்டு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்

1. இம்மனைப்பிரிவில் வடிகால், கழிவு நீர் செல்வது தொடர்பாக பொது பிரச்சனை வரும்போது மனைப்பிரிவு உரிமையாளரே தனது சொந்த பொறுப்பில் தீர்வு செய்ய வேண்டும். இது நகராட்சியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது.
2. மேற்படி மனைப்பிரிவில் நகராட்சி சாலைகளிலோ, நகராட்சிக்கு சொந்தமான இடத்திலோ எவ்வித ஆக்கிரமிப்புகளும் வரும்படுத்த கூடாது மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவை எவ்விதி முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
SWP/DTCP/ERODE/LAYOUT
APPROVAL NO.02/2025
மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி.

21/07/25

பெறுநர்
திருமதி. வாசுகி சின்னசாமி
க/பெ. சின்னச்சாமி,
111, மெயின் ரோடு,
கணபதிபாளையம், நான்கு ரோடு,
புஞ்சைகாளமங்கலம் கிராமம்,
மொடக்குறிச்சி (தா) ஈரோடு (மா)

நகல்

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு.
2. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.
3. 1ம் எண் இணை சார்பதிவாளர், கோபிசெட்டிபாளையம்
4. வட்டாட்சியர், கோபிசெட்டிபாளையம்.
5. நகராட்சி பொறியாளர்,
6. உதவி வருவாய் அலுவலர்,